
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


| | | |
|---|---|---|
| மலர் 3 | ஜூன் 1990 | இதழ் 6 |


பரிசுத்த



வேதாகமம்


வெளியிடுவோர்:-

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

**2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.**

(29ம் பக்கம் தொடர்ச்சி)

கிறிஸ்துவின் அரசாட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்வோமாக.

குறிக்கப்பட்ட வசனங்களை வாசித்து, சிந்தித்து புரிந்து கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்களுக்கு புரிந்து கொள்ளும் ஆவியை அருள் செய்வாராக.

**குறிப்பு :** தேவன் சிருஷ்டித்த பூமி பிசாசினால் தாக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. மீண்டும் அதை மீட்க தம்முடைய குமாரனை அனுப்பி, அவருடைய மரணத்தினால் வெற்றி சிறந்தார். இப்பொழுது பூமியை பரிசுத்தப் படுத்தி தம்முடைய இரண்டாம் வருகையில் அதை பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார்.

**எம். ஏ. தானியேல்**
மலேசியா

---

## இதழின் உள்ளே

1. சமய ஒற்றுமை சாத்தியமே!
2. ஒருவனும் உன்னை அசட்டை செய்ய இடம் கொடாதிருப்பாயாக
3. நோவாவின் விசுவாசம்
4. சில கிறிஸ்தவர்கள் ஞாயிறு ஆராதனைக்கு மட்டுமே வருகிறார்கள் மற்ற சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லையே, ஏன்?
5. ஆயிர வருட அரசாட்சி

---

// THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

❋ ❋ ❋

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity:

Vol 3. June—1990 Issue 6

**ஆசிரியவுரை**

## சமய ஒற்றுமை சாத்தியமே!

மக்களை நல்வழிப்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு பல சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் சமயச் சண்டைகள் பெருகினவே தவிர, வேறே பெரிய நன்மைகள் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற நிலைக்கு சமயங்கள் இடையூறாகவே இருக்கின்றன.

ஆனால் அவ்வப்பொழுது சமய ஒற்றுமை வேண்டும் என்று மேடை போட்டுப் பேசுகிறார்கள், கூட்டம் போடுகிறார்கள், குழு அமைக்கிறார்கள் பயன் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் ஒற்றுமை ஏற்படுவதற்கு எந்த அடிப்படையை ஆதாரமாகக் கொள்வது என்பதைத் தீர்மானிக்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். வேரை வெட்டியெறியாமல் கிளைகளை நறுக்குகிறார்கள்.

**சமய ஒற்றுமை ஏற்பட சில யோசனைகள் :**

முதலாவது **உலகமெங்கும் வாழுகிற அனைவருக்கும் ஒரே கடவுள் தான் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

சீரியர் நாட்டவர்கள் ஒவ்வொரு இடத்துக்கும் ஒவ்வொரு கடவுள் இருக்கிறதாக எண்ணிக் கொண்டிருந்தார்கள். அதாவது சமவெளிப் பிரதேசத்துக்கு ஒரு கடவுள், மலைப் பாங்கான இடங்களுக்கு வேறொரு கடவுள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள் (1 ராஜா 20:28) நம்முடைய தமிழ் நாட்டிலே கூட ஒவ்வொரு இலாக்காவுக்கும் ஒரு கடவுள் இருப்பதாக நம்புகிறார்கள். ஆக்க ஒரு கடவுள், அழிக்க வேறொரு கடவுள், காப்பதற்கு ஒரு கடவுள்

கல்விக்கு, செல்வத்துக்கு என்று பல கடவுள்கள் இருப்பதாக எண்ணி அவர்களை பூஜித்து வருகிறார்கள். கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் பவுல் அப்போஸ்தலன் கண்ட காட்சி என்ன? பல விக்கிரங்கள்! ஆகவே அதை விக்கிரங்கள் நிறைந்த பட்டணம் என்று வர்ணிக்கிறார். (அப் 17:16) ஆனால் இஸ்ரவேல் நாட்டு மக்கள் மட்டும் தங்கள் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்று நம்பியிருந்தார்கள். (உபா 6:4) இந்த ஒரே கடவுள் கொள்கையை இயேசுவும் அவருடைய சீஷர்களும் போதித்தார்கள் (மார்க்கு 12:29,30; 1 கொரி 8:6; எபே 4:6)

அந்த ஒரே கடவுள் கொள்கை சிந்திக்கிற மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில் அறிவுக்குப் பொருத்தமாக இருக்கிறது. **மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப் பட்ட காலங்களையும், அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்"** (அப் 17:26) என்கிற வசனத்தில் அது பலமாய் நிருபிக்கப்படுகிறது. மனிதன், என்ன உணவைச் சாப்பிட்டாலும், எந்த சீதோஷ்ண நிலையில் வாழ்ந்தாலும், எந்த நிறத்தவனாயிருந்தாலும், எம் மொழி பேசுபவனாக இருந்தாலும் அவர்களுடைய இரத்தம் சிவப்பாகவும், மற்ற மிருகங்கள், பறவைகள் நீர்வாழ் உயிர்கள் ஆகியவைகளின் இரத்தத்திலிருந்து வேறுபட்டும் இருக்கிறதை நாம் காண்கிறோம். பல கடவுள்கள் மனிதனையும், உலகத்தையும் படைத்திருந்தால் வெவ்வேறு விதமான நிறத்திலும் தன்மையிலும் இருந்திருக்கும். ஆகவே **''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''** என்ற கொள்கையை அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டால் ஒழிய சமய ஒற்றுமை ஏற்பட முடியாது.

**உலக மக்கள் அனைவரும் ஒரே உபதேசத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்**

ஒரே கடவுளை ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறிக் கொண்டு தங்கள் மனம் போல் கொள்கைகளை வகுத்துக் கொண்டு, ஒருவரோடொருவர் இணக்கமில்லாமலும், முரண்பட்டும் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி பிரிவினை உண்டாக்குகிறார்கள். அப்படிப்பட்ட சுயநலமிகளையும் கள்ள போதனங்களையும் அடையாளம் கண்டு கொண்டு சத்தியத்தைத் தேடி வாசித்து அதில் நிலை நிற்க வேண்டும். எபிரேய நிருப ஆசிரியர் (1தெச 5;21 அப் 17:11) **பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய்த் திரு-**

**வுளம் பற்றினார்**, என்கிறார் (எபி 1:1,2) அதன் கருத்தைச் சிந்திப்போம். தேவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவைக்கு ஏற்ப பரிசுத்த ஆவியினால், பரிசுத்த மனிதரை ஏவி, தேவனுடைய திட்டத்தை மனிதருக்கு வெளிப்படுத்தினார். (2 பேதுரு 1:21) ஆனால் இப்பொழுது அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு பேசுகிறார். **''நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னது என்றும், உபதேசிக்க வேண்டியது இன்னது என்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.**

**அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்''** என்கிறார் இயேசு. அதாவது இயேசு கிறிஸ்துவின் போதனை தேவனுடைய போதனையே.

அவர் இவ்வுலகுக்கு வந்த வேலை முடிந்த பின்பு பரலோகத்திலிருக்கிற தம்முடைய பிதாவினிடத்திற்குச் சென்று அவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம். அப்படிச் செல்லுவதற்கு முன்பு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க. அதிகாரம் கொடுத்தார். (மாற்கு 16:15,16) அவர்களுடைய போதனைகளை இயேசு அங்கீகரிக்கும் வகையில், **''உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான். உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அசட்டை பண்ணுகிறான். என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணுகிறான்'' என்கிறார்.** (லூக் 10:16) மேலும் அப்போஸ்தலர்கள், பேச வேண்டியவைகளை அவர்களுக்கு வெளிப்படுத்த அவர் சத்திய ஆவியானவரை அனுப்புவதாக வாக்களித்தார் (யோவான் 16:7), **''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.**

**பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள், அதனால் அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்''** (யோவான் 16:13-15) அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு, **ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்**

**கொண்ட போது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல், தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவ வசனந்தான் என்கிறார்.** *(1தெச 2:13)*

*மேலும், பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுக்கு எழுதும் போது,* **வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது** *என்கிறார். (2 தீமோ 3:16) ஆகவே உபதேசங்கள் அப்போஸ்தலர்களாலும், பரிசுத்த ஆவியாலும், இயேசு கிறிஸ்துவினாலும் போதிக்கப் பட்டிருந்தாலும் அதன்* **மூலம்** *தேவனே. எனவே பரிசுத்த வேதாகமம் கூறுகிற அனைத்து உபதேசங்களும் மெய்யான ஜீவனுள்ள தேவன் மனுக்குலம் அனைத்துக்கும் கொடுத்தவைகள். அவைகளையன்றி வேறே உபதேசம் கிடையாது என்கிற எண்ணம் விசுவாசிகளுக்கு ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும்.*

**மார்க்க விஷயத்தில் யாருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதில் ஒரு தெளிவு வேண்டும்.**

*'ஒரு சிலர் என்னுடைய மனச் சாட்சியே எனக்கு வழி-காட்டி, அதன்படிதான் செய்வேன் என்பர். இன்னும் சிலர் பெற்றோர்களின் முடிவு தான் சரி என்பர். வேறு சிலர் சமுதாயம், அதன் கட்டுப்பாடு இவைகள் முக்கியம் என்பர். இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்தால் சமய ஒற்றுமை நிலவுவது எங்ஙனம்? ஒற்றுமை வேண்டும் என்றால் ஒரு பொது அதிகாரத்தை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அந்தப் பொது அதிகாரம் எது-வாக இருக்க முடியும்? இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பிறகு சீஷர்களிடம்* **''வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது''** *என்றார். (மத் 28 : 18) அதை பரிசுத்த ஆவியானவர் அப்-போஸ்தலன் பவுல் மூலமாக ஆமோதிக்கிறார்.* **''ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்** *என்கிறார். (பிலி 2 : 9-11) பேதுரு இதைக் குறித்து* **''தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவ-**

**னுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது என்கிறார்.** (2 பேது 1-3) இப்படியிருக்க ஒருவன் தான் விரும்புகிறதையே விசுவாசிப்பேன் என்று அடம் பிடித்தால் பிரிவினை தவிர்க்க முடியாதது ஆகி விடுமே. மாத்திரை இனிப்பாக இருந்தால் தான் சாப்பிடுவேன் என்று முரண்டு பிடிக்கிற குழந்தையைப் போல் நாம் இருக்கக் கூடாதே. ஆகவே மார்க்க சம்பந்தமான விஷயங்களில் இயேசு கிறிஸ்துவே சகல அதிகாரமுடையவர் என்றும் தனிமனிதருக்கோ உயர் மட்டக் குழுக்களுக்கோ, இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தில் தலையிட உரிமை கிடையாது என்றும் உணராத வரை சமய ஒற்றுமை என்பது சாத்தியமில்லை.

**இன்னும் ஒரு சிலர் பழைய ஏற்பாடும் தேவனால் கொடுக்கப்பட்டது தானே. அதையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுவர்.**

இது எபிரேய நிருபத்துக்கு முரண்பாடானது. பழைய ஏற்பாட்டில் தேவன் தீர்க்கதரிசிகளின் மூலமாகப் பேசினார். இப்பொழுது (கடைசிக் காலத்தில்) தமது குமாரன் மூலமாகவும் அவருடைய அப்போஸ்தலர்கள் மூலமாகவும் பேசுகிறார் என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். இதோ, இன்னும் கூட சில ஆதாரங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசேயருக்கு எழுதும்போது **''நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவில் இராதபடி எடுத்து, சிலுவையின் மேல் ஆணி அடித்து முடிவுக்கு கொண்டு வந்தார்** என்று கூறுகிறார். (கொலோ 2:14) மேலும் எபிரேய நிருப ஆசிரியர் ''புதிய உடன்படிக்கையை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக பழைய உடன்படிக்கை அப்புறப்படுத்தப்பட்டது என்கிறார் (எபி 9:15-17; 7:18; 10:9)

இயேசு கிறிஸ்துவினுடைய மரணம், தடுப்புச் சுவராக நின்ற பழைய பிரமாணத்தைத் தகர்த்துப் போட்டு யூதர்களையும் புறவினத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்குள் ஒப்புரவாக்கினது. (எபே 2:14-16) அப்படியிருக்கும் போது ஒருவன் பழைய பிரமாணம் முழுவதையுமோ அல்லது அதில் ஏதாவது ஒரு பகுதியையோ கைக்கொள்ள வேண்டும் என்று விரும்பினால் அவன் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தவன் ஆவான். (கலா 5:4) ஆகவே நாம் சமய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்றால் இயேசு கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலர்களாலும் உபதேசிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

**பொதுவான இரட்சிப்பை அடைவது நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.**

அப்போஸ்தலனாகிய யூதா என்பவர் நம்முடைய பொதுவான இரட்சிப்பைக் குறித்துச் சொல்லும்போது **''பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக''** (யூதா 3) என்கிறார். தேவன் இரட்சிப்பின் திட்டத்தை ஆளுக்கொரு விதமாய் வெளிப்படுத்தவில்லை. மார்க்கப் பிரிவினை வாதிகள் இரட்சிப்பைப் பற்றிப் பலவிதமாய்ப் போதிக்கிறார்கள். அது வேதாகமத்துக்கு புறம்பானது. **ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க மாட்டான்** என்று யோவான் 3:5ல் வாசிக்கிறோம். மேலும் இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை என்று வர்ணிக்கப்படும் மாற்கு 16:15,16 கூறுவதாவது .. **நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** அதாவது சுவிசேஷம் அனைத்து நாடுகளிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும் மக்கள் ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிய விரும்பினால் அவர்கள் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்க வேண்டும். அது எப்படி என்பதை அப்போஸ்தலர்கள் பின்னர் பல இடங்களில் விளக்கிச் சொல்லுகிறார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த் தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தேகோஸ்தே பண்டிகை நாளில் எருசலேமில் கூடியிருந்த மக்கள் அப்போஸ்தலரைப் பார்த்து .. **நாங்கள் என்ன செய்ய வேண்டும்?** என்று கேட்டார்கள். அதற்கு அளிக்கப்பட்ட பதில் **நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்** (அப் 2:37,38) சுவிசேஷகன் பிலிப் சமாரியா பகுதியில் பிரசங்கித்தார். வசனத்தை ஏற்றுக் கொண்ட **ஆண்களும், பெண்களும்** ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். (குழந்தைகள் அல்ல) (அப் 8:5,12) சத்தியத்தை ஏற்றுக் கொண்ட எத்தியோப்பிய மந்திரி கேட்ட கேள்வி: **''இதோ தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தடை என்ன?** (அப் 8:36) பதில் **நீர் முழு இருதயத் தோடும் விசுவாசித்தால் தடையில்லை''** என்று கூறப்பட்டது. தொடர்ந்து வாசித்தால் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் என்று பார்க்கிறோம் (அப் 2:37,38) பிலிப்பில் பட்டணத்துச் சிறை அதிகாரி சத்தியத்தைக் கேட்டு அவனும் அவனுடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக்

கொண்டார்கள் (அப் 16:33) மூன்று நாள் இரவும் பகலும் உபவாசித்துக் கொண்டிருந்த பின்னர் பவுலாக மாறிய சவுலுக்குச் சொல்லப்பட்டதென்ன? **"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு** (அப் 22:16)

ஆக மேற் சொன்ன அனைவருக்கும் இரட்சிப்பு ஒரே விதமான முறையில் தான் வந்தது. இன்றைக்கும் அதே இரட்சிப்பின் திட்டம் தான் தேவனால் அங்கீகரிக்கப்படும். எல்லாக் காலத்திலும், எல்லா மனிதருக்கும் இது ஒன்றே வழி (ரோமர் 3:23, 24; 6:3) மக்கள் சுவிஷேச உரையைக் கேட்டனர், விசுவாசித்தனர், மனந்திரும்பினர், அறிக்கை செய்தனர், ஞானஸ்நானம் பெற்றனர். சுலபமான முறை; குழப்பத்திற்கு இடமேயில்லை. **எத்தனை பேர் வசனத்தை ஏற்றுக் கொண்டார்களோ அத்தனை பேரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.** (அப் 2;41) அதனுடைய பலன்களை கலா 3:26, 27ல் வாசிக்கிறோம். **"நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.**

**ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே,"** என்றது இது தான் பொதுவான இரட்சிப்பு. எல்லாருக்கும் ஒரே சுவிசேஷம், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் எல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்று. இந்த நிலையை எல்லாரும் ஏற்றுக் கொண்டால் தான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும்.

**உலகம் முழுவதும் ஒரே விதமான சபை அமைப்பு** உண்மையாகவே ஒற்றுமை வேண்டுமானால் மார்க்கப் பிரிவினைகள் என்ற தடுப்புச் சுவர்கள் இடித்தெரியப் பட வேண்டும். அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கங்களாக இணைக்கப்பட வேண்டும். அது எப்படி சாத்தியமாகும்? அதை எப்படி ஒழுங்கு படுத்த முடியும்? யார் அதற்கு ஆளுநராக இருப்பது? அதில் அங்கம் வகிப்பது எப்படி? இந்தப் பிரச்சனைகளுக்கு மனித ஞானத்தைக் கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அது முடியாதுதான். ஆனால் தேவனாலே எல்லாம் கூடும். நமக்கு வேண்டியதெல்லாம் பணிவும் நேர்மையும் தான். இயேசு சொன்னார். "நான் என் சபையைக் கட்டுவேன்" என்றார் (மத் 16;18) அப்படியே தன் சுய இரத்தத்தைச் சிந்தி அதைச் சம்பாதித்தார் (அப் 20 : 28) அவர் தான் அதற்குத் தலைவர் (கொலோ 1:18) அவர் தான் அதன் இரட்சகர் (எபே 5:23) சபையே கிறிஸ்துவின்

மணவாட்டி (எபே 5:22-32) இவ்வளவு இருந்தும் அதைக் கிறிஸ்துவின் சபை என்று அழைக்க முன் வரமாட்டோம் என்கிறோமே (ரோமர் 16:16) இது என்னுடைய சபை, இது உன்னுடைய சபை, இது யோவான் சபை, இது பேதுரு சபை என்று யார் யார் பேரிலே அழைக்கிறோமோ இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து சபை ஒன்று தான் அது **கிறிஸ்துவின் சபை** என்று ஏற்றுக் கொள்ளாதவரை சமய ஒற்றுமைக்கு வாய்ப்பே கிடையாது.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபையில் நிலவிய ஒற்றுமையின்மையைக் கண்டித்து வேதனையோடு கேட்ட கேள்விகளை ஜெபத்துடன் வாசியுங்கள். **''உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் நான் கேயாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படி சொல்கிறேன்.**

**கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றீர்களா?** (1 கொரி 1:12,13) எபேசியர் நிருபத்தின் 4-ம் அதிகாரம் சொல்லுகிற ஏழு ஒன்றுகளைக் கவனியுங்கள். 1. **ஒரே நம்பிக்கை** 2. **ஒரே சரீரம்** (சபை) 3. **ஒரே ஆவி** 4. **ஒரே கர்த்தர்** 5. **ஒரே விசுவாசம்** 6. **ஒரே ஞானஸ்நானம்** (தெளிப்பது ஞானஸ்நானமல்ல) 7. **ஒரே தேவன்.** சகோதரர்களே, இவைகளையெல்லாம் சிந்தியாமலும் நடைமுறைப்படுத்த மனமில்லாமலும் வெறுமனே ஒற்றுமை! ஒற்றுமை! என்று கூறுவது ஊரை ஏமாற்றுவதற்குத் தான். உருப்படியாக ஒன்றும் நடைபெறாது தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் கனம் பண்ணி இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவருடைய உபதேசச் சட்டங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து இயேசுவின் இறுதி ஜெபத்தை நடைமுறைப்படுத்த தேவன் நம்மை வழி நடத்துவாராக!

**E.Z. செல்வநாயகம்**

# 'ஒருவனும் உன்னை அசட்டை செய்ய இடம் கொடாதிருப்பாயாக'

**"இவைகளை நீ பேசி போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள். ஒருவனும் உன்னை அசட்டை செய்ய இடம் கொடாதிருப்பாயாக"** *(தீத்து 2:15)* என்ற அறிவுரை அப்போஸ்தலனாகிய பவுல் தீத்து இன்னும் இளம் பிரசங்கிக்கு கூறியது இங்கே தீத்து என்ன பேசவேண்டும், எதைப் பிரசங்கிக்க வேண்டும் எப்படிக் கடிந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் எழுதுகிறார்.

கடிந்து கொள்ளுதல் என்பது ஒரு சிக்கலான பணி. ஒருவனுடைய மனதைப் புண்படுத்தாமல்-தவறு செய்கிறவர்களுடைய கோபத்துக்கும், வெறுப்புக்கும் ஆளாகாமல் கடிந்து கொள்வது சிரமம். ஆனாலும் ஒரு பிரசங்கி அதைச் செய்து தான் ஆக வேண்டும் என்று சொல்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் சகல அதிகாரத்தோடும் அதைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறார். மேலும் தவறு இழைக்கிற மனிதர்களிடத்தில் கண்டிப்பும், கறாராகவும் இருக்க வேண்டும் என்று கூறுகிற அதே நேரத்தில் ஒருவனும் உன்னை அசட்டை பண்ணுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்றும் சொல்லத் தவறவில்லை.

ஒருவனை நாம் கண்டிக்கும் போது, நாம் அதை அவர்களுடைய நன்மையைக் கருதியும் அவர்கள் திருந்தி வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் தான் அவர்களைக் கண்டிக்கிறோம் என்று அவர்கள் புரிந்து கொள்ளும்படியாகச் செய்ய வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களை மட்டமாக விமர்சித்தும், ஆபாசமான கீழ்த்தரமான வார்த்தைகளைப்பேசி அகம்பாவ உணர்வோடும் நடந்து கொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் அவர்கள் நல்லெண்ணத்தைப் பெறுவதற்குப் பதிலாக வெறுப்பும் கசப்புமே மிஞ்சும்.

சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எருசலேம் நகரில் கூடி வந்திருந்த திரளான மக்கள் கூட்டத்தில் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை முதன் முறையாகப் பிரகடனம் செய்த சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். அக் கூட்டத்தில் மூவாயிரம் பேர் இரட்சிக்கப் பட்டார்கள். மேலும் .. **"தேவனைத் துதித்து ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்"** *அப் 2:47.* அவர்களுடைய

தயவைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் சத்தியத்தை விட்டுக் கொடுக்கவோ அல்லது தேவனுடைய சித்தத்தை மாற்றியோ போதிக்கவில்லை. சொல்லப் போனால் அங்கே கூடியிருந்தவர்களில் சிலர் தேவனுடைய குமாரனைக் கொலை செய்த கூட்டத்தில் இருந்தவர்கள் என்று கூட குற்றம் சாட்டினார்கள். ஆனால் அப்படி அவர்களைக் குற்றப்படுத்தி விட்டு, அதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்றும் கூறி அவர்களுடைய தவறுகளைக் திருத்திக் கொள்ள ஆலோசனையும் கூறினார்கள். அதைக் கேட்ட மக்களில் சிலர் உண்மையை உணர்ந்தார்கள். சிலர் அவர்கள் சொன்னதில் உள்ள நியாயத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அப்போஸ்தலர்கள் அப்படிச் செய்யாமல் அவர்களை மட்டரகமாய் விமர்சித்து அவர்களைக் கடித்துக் குதறியிருந்தால் அங்கே ஒரு பெரிய கலகமே ஏற்பட்டு அவர்கள் உயிர் பிழைப்பதே அரிதாக இருந்திருக்கும். ஆனால் அவர்களுடைய அணுகுமுறையில் இருந்த நல்லெண்ணம் மற்றும் மன்னிக்கும் இயல்பு மூவாயிரம் ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்த உதவியது. சபை ஸ்தாபிதம் ஆகியது. அன்புடன் சத்தியத்தைப் பிரசங்கித்தால் கூட நம்மை சிலர் வெறுக்கக் கூடும் அசட்டை செய்யக் கூடும். (எபே 4 : 15;2 தெச 2:10) அதனால் நாம் வெகுண்டு, கேட்கிற மக்களின் வெறுப்புக்கும், எரிச்சலுக்கும் ஆளாகக் கூடாது. மாறாக ஆரோக்கியமான சத்தியத்தை உறுதியுடனும், தைரியத்துடனும் தொடர்ந்து போதிக்க வேண்டும்.

இப்படிச் செய்யாமல் சில பிரசங்கிமார்கள் முகத்தில் கடுமையைத் தேக்கி கொண்டு கோபாவேசத்தோடு சத்தியத்தைப் பிரசங்கிக்கிறார்கள். இதனால் தேவையில்லாத விரோதங்கள் உண்டாகின்றன. கேட்கிற மக்கள் சிந்திப்பதற்குப் பதிலாக வெறுப்படைகிறார்கள். இதைக் குறித்து சம்பந்தப்பட்ட பிரசங்கிமார்களிடத்தில் எடுத்துச் சொன்னால் அவர்கள் திருந்திக் கொள்வதற்குப் பதிலாக வேதத்திலிருந்து சில உதாரணங்களைச் சொல்லி தாங்கள் செய்ததை நியாயப்படுத்திப் பெருமை கொள்வார்கள். ஆனால் ஒரு விஷயத்தை அவர்கள் மறந்து விடுகிறார்கள். நம்முடைய பிரதான நோக்கமாகிய ஆத்தும ஆதாயத்துக்கு இது பெரும் தடையாக அமைந்துவிடும். சத்தியத்தைப் பிரசங்கிக்கிற நமக்கு கசப்பு உணர்வுகள் கூடாது.

வேறு ஒரு இடத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் இளைஞனாகிய தீமோத்தேயுவுக்கு, "**உன் இளமையைக் குறித்து**

**ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடத்தையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரி யாயிரு''** (1தீமோ 4 : 12) என்று எழுதுகிறார். இளைஞர்களுடைய போக்கும், பேச்சும், நடவடிக்கைகளும் வயதானவர்களுக்கு சில நேரங்களில் அதிருப்தி உண்டாக்குவதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே, இளம் பிரசங்கிகள் இளைஞர்களும் பெரியவர்களும் பாராட்டும்படி பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

சபையின் மிகக் கௌரவம் வாய்ந்த பதவிகளாகிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கு இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகின்ற குணதிசயங்களின் பட்டியல் தீமோத்தேயு முதலாம் நிருபத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அப்படிப் பட்ட நபர்கள் மிகவும் சிறந்த சன்மார்க்கமுள்ளவர்களாகவும் நல்ல கணவனாகவும், நல்ல தகப்பனாகவும் இருக்க வேண்டும் என்றும் மற்றவர்களைப் போதனையின் மூலமாகவும், தன் சொந்த வாழ்க்கையின் மூலமாகவும் வழி நடத்துபவனாகவும் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறது அதில் சிறப்பு வாய்ந்தது. **''புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனுமாயிருக்க வேண்டும்''** என்னும் நிபந்தனையாகும். சபையின் முன்னோடியாக இருப்பவர்கள் சமுதாயத்தில் நன்கு மதிக்கப்படத்தக்கவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் சபை, மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வளர்ச்சியடையும். ஒழுக்கமில்லாதவர்களும் சமுதாயத்தில் இகழப்படுகிற காரியங்களைச் செய்பவர்களும் சபையின் முன்னோடிகளாக இருந்தால் அவர்களால் சபையின் வளர்ச்சி பாதிப்படையும்.

அப்போஸ்தலன் பேதுரு கூட கிறிஸ்தவ அறம் மற்றும் பண்பு நெறிகளைப் பற்றியும் ஆவிக்குரிய தன்மைகளைப் பற்றியும் பேசும் போது, இந்தக் குண நலன்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள், கர்த்தருக்கு முன் பாகவும், புறவினத்தார் முன்பாகவும் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லிருக்கிறார். **''இப்படி யிருக்க நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களால் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.**

**இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகி-னால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களாக வும் இருக்கவொட்டாது (1பேது 1:5-8)**

அப்போஸ்தலனாகிய பவுலும் கூட ஆவியின் கனியை பற்றிச் சொல்லும்போது, **அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்,** இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை என்கிறார். (கலா 5:22-23) இவைகளின் சுருக்கம் என்னவெனில், ஒரு கிறிஸ்துவின் நல்ல பண்பாளனாக இருந்து சகோதரர்களையும், மற்றவர்களையும், மதித்து, நேசித்து, ஒழுக்கமாய் நடந்து கொண்டு, நற்செய்கைகளைச் செய்யும் இயல்-புள்ளவனாக இருந்தால் சகோதரர்களாலும், உலக மக்களாலும் நன்கு மதிக்கப்படுவான் என்பதாகும். அப்போஸ்தலன் பவுல் குறிப்-பிட்டதைப் போல இதற்கு எதிரான பிரமாணம் ஒன்றுமில்லை. அதாவது நற்காரியங்கள் செய்வதற்கு எந்தப் பிரமாணமும் குறுக்கே நிற்பதில்லை. இம்மாதிரியான நற்பண்பாளர்கள் சமுதாயத்-தில் நன்கு மதிக்கப்படுகிறபடியால், இவர்கள் சத்தியத்தைப் பிரசங்கிக்கும் போது மக்கள் கவனமாகக் கேட்பார்கள் நல்ல பலனும் கிடைக்கும்.

நாம் கர்த்தருடைய திருப்பணிக்காக அழைக்கப்பட்டிருக்-கிறோம் என்ற எண்ணம் எப்பொழுதும் நமக்கு ஞாபகமிருக்கும் படி தேவன் ஒத்தாசை செய்வாராக! நாம் கர்த்தருடைய பெயருக்குச் இழுக்குத் தேடித்தராமல்-அவருடைய பெயர் பிரசித்தியடைவதற்குத் தடையாக இராமல் வாழ முயல்வோமாக அதா-வது, ஒருவனும் நம்மை அசட்டை செய்ய இடம் கொடாதபடி நடந்து கொள்வோமாக.

**J.C. சோட்**

# நோவாவின் விசுவாசம்

எபிரேயர் நிருபம் பதினோராம் அதிகாரம் விசுவாச வீரர்கள் வீராங்கனைகளின் பட்டியலைத் தருகிறது. ஏழாம் வசனத்தில் **''விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டு பண்ணினான். அதனாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான்''** என்று வாசிக்கிறோம்.

இந்த வசனத்தில் குறைந்தது ஐந்து காரியங்களை நோவாவின் விசுவாசத்தில் காணலாம். அதைக் கவனமாகப் படித்து நோவாவின் விசுவாசத்தின் மேன்மையை உணருவோமாக.

I **தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்பை பெற்றான்** ஆதி 6 : 8, 9. ம் வசனங்களில் **''நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தேன். நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான்** என்று எழுதப்பட்டிருக்கிறது. அவனுடைய விசுவாசத்துக்குப் பரிசாக தேவன் நோவாவை அழிவிலிருந்து காப்பாற்ற சித்தம் கொண்டார். தேவன் உலகத்தில் உள்ள எல்லா உயிர்களையும் அழித்துப்போகும் திட்டத்தை நோவாவுக்கு வெளிப்படுத்தினார். நோவாவோ அல்லது வேறு எவருமோ இதற்கு முன் மழையைப் பற்றி அறியாதவர்களாகவே இருந்தார்கள். இருப்பினும் தேவன் சொன்னார், அது அப்படியே ஆகும் என்று நோவா பரிபூரணமாக விசுவாசித்தபடியால், இதுவரை நடந்திராத ஒரு காரியத்தைக் குறித்த எச்சரிக்கைக்குக் கீழ்ப்படிந்தான்.

II **காரணம் நோவா கர்த்தருக்குப் பயந்தான்** பயம் என்பது இருவகை. ஒன்று கிடைக்கப் போகும் தண்டனையை நினைத்துப் பயப்படுகிற பயம். இன்னொன்று அன்பினாலும் மரியாதையினாலும் உண்டாகிற பயம். வேதாகமத்தில் பயமும் கீழ்ப்படிதலும் ஒன்றையொன்று தழுவி நிற்கிறது. உதாரணமாக .... **தேவனுக்குப் பயந்து அவருடைய கட்டளையைக் கைக்கொள்ளுகிற எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே** (பிர 12:13) நோவாவின் பயம் ஒரு காரியத்தைச் செய்யும்படி ஏவியது.

அவருடைய பயம் எதைச் செய்யும்படி தூண்டியது?

III **நோவா தன் குடும்பத்தைக்காப்பாற்ற ஒரு பேழையைக் கட்டினான்.** தேவன், நோவாவிற்குப் பேழையைக் கட்டுவதற்கு ஒரு சில குறிப்புகளைக் கொடுத்திருந்தார். அந்தக் கட்டளைக்கு அவன் முழுமையாய்க் கீழ்ப்படிந்தான். ஆதி 6:22;7:5 தேவன் சொன்னபடியெல்லாம் நோவா செய்யாமல் இருந்தால் அவன் ஜலப்பிரளயத்துக்குத் தப்பி இருக்க முடியாது. வேதாகமம் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில், **கிரியையில்லாத விசுவாசமும் செத்ததாக இருக்கிறது** என்று கூறுகிறது. (யாக் 2:17, 24, 26) தேவனுக்குக் கீழ்ப்படிந்ததின் மூலம் நோவா தன் விசுவாசத்தைக் காண்பித்தான்.

IV **நோவா தன்னுடைய விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தான்.** தேவன் உலகத்தை அழித்தது போல ஒரு ஆக்கினையை நோவா உலகுக்கு அளிக்கவில்லை. ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததன் மூலம் கீழ்ப்படிய மறுத்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாக்கினான் 2 பேது 2:5, நோவாவை நீதியைப் பிரசங்கித்தவர் என்று வர்ணிக்கிறது. அவனுடைய பிரசங்கம் உலகத்தை இரட்சிக்கிறதற்காகக் கொடுக்கப்பட்டதேவனுடைய திட்டம் ஆனால் அவனுடைய குடும்பத்தாரைத் தவிர வேறு யாரும் கீழ்ப்படியவில்லை. அதன் விளைவாக மற்ற எல்லாரும் மடிந்து போனார்கள். நோவா, உலகத்தாரோடு சேர்ந்து கொண்டு மடிந்து போகச் சம்மதிக்கவில்லை. உலகத்தில் உள்ள ஒருவர் கூட கீழ்ப்படிய மறுத்தாலும், தான் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான்.

V **நோவா விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்குச் சுதந்திர வாளியானான்.** ஏசே 14:14ல் நோவாவின் பெயர் தானியேல், யோபு ஆகியோரின் பெயர்களோடு இணைந்து நீதியினிமித்தம் தங்கள் ஆத்துமாக்களைக்காத்துக் கொண்டார்கள் என்று சாட்சி கூறுகிறது. தன்னுடைய விசுவாசம் கீழ்ப்படிதல் ஆகியவைகளினால் தேவன் தனக்கு வைத்திருந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான்.

எப்படி நோவாவை தான் இதுவரையிலும் கண்டிராத ஒன்றைக் குறித்து எச்சரித்தாரோ அதே போன்று தற்காலத்தில் வாழுகிற நம்மையும் கூட நாம் காணாத ஒன்றைக் குறித்து எச்சரிக்கிறார். **கர்த்தர் வரும் நாளில் வானமும், பூமியும் வெந்து உருகிப் போகும்** என்று வேதாகமம் எச்சரிக்கிறது. (2 பேது 3:10-12) வேதாகமம், சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு வரும் ஆக்கினைத் தீர்ப்பைக் குறித்து 2 தெச 1:7-10ல்

சொல்லுகிறது. இந்தச் சம்பவங்கள் நிச்சயமாக நடைபெறும் என்று அறிவோம். ஏனெனில், **நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.** (2 கொரி 5:7) நாம் நோவாவின் சீரிய முன் உதாரணத்தைப் பின்பற்றி தேவனுடைய எச்சரிப்புக்குத் தலை வணங்குவோம்.

நோவாவை, ஜலப்பிரளயத்தைப் பற்றிய பயம் எப்படி தேவனுக்குக்கீழ்ப்படிய வைத்ததோ அதைப் போன்று தற்காலத்தில் வாழுகிற நம்மை அக்கினியினால் வெந்து அழிந்துபோவோம் என்கிற பயம் ஆட்கொள்ள வேண்டும். பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இரட்சிப்படைய நாம் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டளைக்கு நோவாவைப் போல முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும்.

நோவா உலகத்தாரோடு சேர்ந்துக் கொண்டு, தேவ எச்சரிப்பை எப்படிப் புறக்கணிக்காமல் கீழ்ப்படிந்தாரோ அவ்விதமாக நாமும் கூட இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரிக்காமல் நம்முடைய சரீரத்தைப் பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் : (ரோமர் 12:2)

கிறிஸ்தவர்கள் மேலானவைகளைத் தேட வேண்டும். (கொலோ 3:1) நோவாவைப்போல் நாமும் கூட நம்முடைய நடத்தையால் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வேண்டும்.

நோவா எப்படி விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானானோ அவ்வாறு நாமும் கூட தேவ சித்தத்துக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து வாழ்நாள் முழுவதும் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால் நாமும் பெரிய ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும். தேவன் மேல் வைத்திருந்த விசுவாசத்தின் காரணமாக நோவா வேதாகமத்தின் வீரர், வீராங்கனைகளின் பட்டியலில் இடம் பெற்றார். அது போல விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் நாமும் கூட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் இடம் பெறலாம்.

இறுதியாக, நோவா, கிறிஸ்தவர்களைச் சூழ்ந்து நிற்கும் மேகம் போன்ற திரளான காட்சிகளில் ஒருவராக இருக்கிறார். எபிரேயர் நிருபம் 12-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற மற்றவர்களோடு சேர்ந்து கொண்டு நோவாவின் விசுவாசம், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையெல்லாம் தள்ளி விட விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாய் ஓடக் கடவோம் (எபி 12:1-2)

**ரேய்மண்ட் சேய்க்**

# சில கிறிஸ்தவர்கள் ஞாயிறு ஆராதனைக்கு மட்டுமே வருகிறார்கள் மற்ற சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லையே, ஏன்?

ஞாயிறு காலையிலோ மாலையிலோ ஒரு மணி நேரம் தொழுகைக்காக செலவிடுவது போதும் என்ற எண்ணம் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் படிந்திருப்பதை நினைக்கும் போது வருந்தாமல் இருக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்துவின் விலை மதியாத இரத்தத்தினால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட மக்கள் (1பேது 1:18) இயேசு கிறிஸ்துவின் சேனையில் தங்களை இணைத்துக் கொண்ட போர் வீரர்கள் (2தீமோ 2:3) இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்து என்னும் தளபதியின் கீழ் சேவகம் புரிகிற தொண்டர்கள் (எபி 2:9-10) உலகத்துக்கு ஒளியாய் இருக்க வேண்டிய சுடர்கள் (மத் 5:14-16) கர்த்தரையும் அவருடைய இராஜ்ஜியத்தையும் முதலாவது தேட வேண்டிய மக்கள் (மத் 6:33) இப்படி நிர்விசாரமாகவும், அசட்டையாகவும் இருப்பது ஏன், என்ன காரணம் என்று பல கேள்விகள் கேட்கத் தோன்றுகின்றன.

| உங்கள் நினைவுகளும் சாக்குப் போக்குகளும் | கர்த்தருடைய பதில்களும் அறிவுரையும் |
|---|---|
| 1. சபை கூடி வருகிற நாளிலும் நேரத்திலும் எனக்கு அதை விட முக்கியமான வேலைகள் இருக்கின்றன. | மத் 6:33, கொலோ 3:1-6. |
| 2. நான் அடிக்கடி அங்கு வந்து கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் அங்கே ஒன்றுமில்லை. | 2தீமோ 2:15<br>1பேதுரு 2:1-3<br>யாக் 1:21 |
| 3. எனக்கு ஆவிக்குரிய காரியங்களில் நிறைய ஞானம் உண்டு அதனால் அப்படிப்பட்ட கூட்டங்களில் கலந்து கொள்வது தேவையில்லாத வேலை என்று வருவதில்லை. | எபி 10:23-25<br>லூக் 18:9-14 |
| 4. நான் ஷெடி கூட்டங்களில் கலந்து கொள்ளும் நேரத்தில் சில் சமூக சேவை செய்து மற்றவர்களுக்கு உபகாரியாக இருக்கிறேன். | மத் 18:19-22<br>poors are always with you |
| 5. ஆராதனையையும், சபைக் கூட்டங்களையும் அசட்டை செய்து விட்டு | யோவான் 15:4,6 |

நான் கர்த்தருக்குள் நான் உறுதியுடன் தான் இருக்கிறேன் என்று சொல்வது பொருந்துமா?

6. சபைக் கூட்டங்கள் நடக்கிற நேரத்தில் உன்னை மதுபானக் கடையிலும், சினிமாக் கொட்டகையிலும், தொலைக்காட்சிக்கு முன்பு மண்டியிட்டும் கிடப்பதை அஞ்ஞானி ஒருவன் பார்க்கும் போது, ஓகோ இவர் தான் சரீரமாகிய சபையின் அங்கமா? புதிய ஏற்பாட்டுச் சபையின் பக்தி வைராக்கியம் இப்படித்தானா? என்று இகழ மாட்டார்களா? — மத் 5:13-16; 2 கொரி 4:2-1; பிலி 2:14-16

7. சபைக் கூட்டங்களில் நீயும், உன் வீட்டாரும் பங்கு பெறாததைக் கவனிக்கிற ஒரு பலவீனமான சகோதரனோ சகோதரியோ இடறுவதற்கும்; விழுவதற்கும் நீங்கள் காரணமாயிருக்கிறார்கள். அது தான் நீங்கள் கர்த்தருக்குச் செய்யும் தொண்டா? சபை வளர்ச்சிக்குத் துணை போவதா? — எபி 10:23-25; எபே 4:14-16

8. சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் விலகி நிற்பதால் நான் சபைக்குக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்றும், அவயவமாகிய எனக்குச் சரீரத்தில் நான் நிறைவேற்றுவதற்குரிய எந்த ஒரு வேலையும் இல்லை என்றும் சொல்லுகிறீர்கள், அது எப்படியாகும்? — எபே 4:14-16; மத் 25:24 30

9. சபை மூலமாக தேவன் கொடுக்கும் ஐக்கியத்தையும் பெலத்தையும், ஆறுதலையும், சமாதானத்தையும் எனக்கு வேண்டாம் என்று உதறித்தள்ளுவது விவேகமா? — எபே 3:9-12; பிலி 4:6-8

10. உங்கள் பிள்ளை கர்த்தருக்கேற்ற இட்சையிலும் போதனையிலும் வளர்க்கும் மாபெரும் பொறுப்பை தேவன் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். நீங்கள் அதை உங்கள் முன்மாதிரியினால் அவர்களை ஊக்குவிக்கிறீர்களா? அல்லது அவர்களுடைய விசுவாசகிகப்பலைச் சேதப்படுத்துகிறீர்களா? — எபே 6:4; 1 தீமோ 1:19

சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பை பாருங்கள். சபை வளர்ச்சியில் நாட்டம் கொள்ளுங்கள். காலம் சமீபித்து விட்டது. விரைந்து போராடுவோம். வெற்றி நம்மதே!

# ஆயிர வருட அரசாட்சி?

பிரியமானவர்களே, ஆயிர வருட அரசாட்சியை குறித்து விசுவாசிகளுக்குள் இரு பிரிவினைகள் காணப்படுகிறது. ஒரு சாரார் ஆயிர வருட அரசாட்சி இப்பொழுது நடந்து கொண்டுயிருக்கிற-தென்றும், மற்றொரு சாரார் இவ்வரசாட்சி இனிமேல் தான் வரும் என்று கூறுகிறார்கள். ஏன் இவ்விதமான மாறுபாடு காணப்-படுகிறது?

ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ள வேண்டாமா? **''சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்து கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்''** என்றார் பவுல் அப்போஸ்தலன் (எபேசியர் 4:3) எனவே இதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் எப்படி வேதவாக்கியங்கள் மூலமாக தெளிவு படுத்தி யிருக்கிறார் என்று அறிவோமாக.

**''தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமா-தானத்திற்கு தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களு-டைய சபைகளெல்லாவற்றிலும் அப்படியே இருக்கிறது''.** என்று வேதம் கூறுகிறது (1 கொரிந்தியர் 15:33) அப்படியிருக்க, நமக்குள் பிரிவினை ஏன்?

பரிசுத்த வேதாகமத்தை ஒருவன் அறிய விரும்பினால் தன் சுய ஞானத்தினாலும், கல்வியினாலும், அறியமுடியாது. ஏனெனில் வேதவாக்கியங்களெல்லாம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதி-னதினால் ஒருவன் அதைப் புரிந்து கொள்ள பரிசுத்த ஆவி அவனுக்குள் வாசம் பண்ண வேண்டும். வேதம் கூறுவதாவது **''தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரிய-வைகளை அறியமாட்டான் என்றும் ஆவிக்குரியவை-களை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்தி காண்-பிக்கிறோம்** என்று 1 கொரிந்தியர் 2:11, 13ல் பவுல் கூறுகிறதை வாசித்து அறியுங்கள்.

அப்படியானால் நீ பெற்றிருக்கும் ஆவி பரிசுத்த ஆவிதானா அல்லது வஞ்சக ஆவியா? நீயே எந்த ஆவியை பெற்றிருக்கிறாய் என்பதை இந்த அரசாட்சியைக் குறித்து எழுதினவைகளை வாசித்த பின் அறியமுடியும். தேவன் தாமே கிருபை செய்வாராக. இந்த அரசாட்சியைக் குறித்து மூன்று பாகமாக பிரித்து விளக்குகிறேன் கவனியுங்கள்!

1. வெளிப்படுத்தின விசேஷத்தின் சுருக்கம்.
2. அரசாட்சியைக் குறித்து தீர்க்கதரிசனங்களும் அதன் நிறைவும்.
3. இராஜ்ஜிய ஸ்தாபகமும் அதன் அரசாட்சியும்.

## 1. வெளிப்படுத்தின விசேஷத்தின் விளக்கம் :-

இச் சுருக்கம் அவசியம்தானா? என்று கேட்கிறதற்கு இட-முண்டு. ஆனால் இது அவசியம்தான். இதை புரிந்து கொண்டால் தான் வேறுபாடு இல்லாமல் ஒத்துக் கொள்ள முடியும். மேலும் இந்த புஸ்தகத்தில் மாத்திரம் ஆயிர வருட அரசாட்சி என்று 6 முறை 20ம் அதிகாரத்தில் காணலாம். எனவே இச் சுருக்கத்தை அறிவது நமக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும் என்பது தெளிவு.

வெளிப்படுத்தின விசேஷத்தில் முதலாம் அதிகாரம் முதலாம் வசனத்தில் **''சீக்கிரம் சம்பவிக்க வேண்டியவைகள்''** என்று குறிக்கப்பட்ட இரண்டு வார்த்தைகளும் மக்களின் இருதயத்தில் ஆணித்தரமாக பதிந்ததினால் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்பட்டயாவும் பிற்காலத்தை குறிக்கும் என்றே வாதாடு-கிறார்கள். ஆனால் அதே அதிகாரத்தில் 19ம் வசனத்தில் **''நீ கண்டவைகளையும் இருக்கிறவைகளையும் இவை-களுக்கு பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது''** என்று குறிக்கும் வசனமாவது சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள் என்பதை மாத்திரம் குறிக்காமல் முன் நடந்தவைகள், இப்-பொழுது நடக்கிறவைகள், இன்னும் நடக்க வேண்டியவைகளையும் கூறுவதினால் நாம் பவுல் அப்போஸ்தலன் 2 தீமோத் தேயு 2:15ம் வசனத்தில் காண்கிறபடி **''சத்திய வசனத்தை நிதான-மாய் பகுத்து''** புரிந்து கொள்வோமாக.

உதாரணமாக வெளி 1:5ல் பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி-யுமாகிய இயேசு கிறிஸ்து இருக்கிறவர் என்றும் எபேசியர் 1:20,21ல் **எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்ல-மைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரம் அல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்-துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்க தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்-காரும்படி செய்து என்று** கூறும் பொழுது அவர் அரசாட்சி செய்கிறவர் என்பதையும் 6ம் வசனத்தில் **தம்முடைய பிதா-வாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின** (இருந்தவரும்) 7ம் வசனத்தில் **''இதோ மேகங்களுடனே வருகிறார்''** (வருகிறவர்) என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்று காலங்களின் நடபடிகள் வெளியாக்கப்பட்டிருப்பதினால் நாம் நன்றாய் வாசித்து புரிந்து கொள்வோமாக.

மேலும் 4ம் அதிகாரத்தில் சிங்காசனத்தின் காட்சியை காண்-பித்து 9ம் வசனத்தில் **''சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து''** என்றும் கூறும் போது அவர் அரசாட்சி செய்கிறார் என்பதையும் குறிக்கிறதல்லவா.

இன்னும் 6 முதல் 11ம் அதிகாரங்களில் இனிமேல் அதாவது பரலோகத்திற்கு ஏறின காலத்திற்கு பிறகு நடக்கிற காரியங்களையும், முடிவையும் (11.15) காண்பித்துள்ளார். இதுபோலவே 12 முதல் 19ம் அதிகாரம் வரை வேறொரு தரிசனத்தை காண்பித்து வருங்காலங்களை விவரித்திருக்கிறார்.

இப்பொழுது நாம் 20ம் அதிகாரத்தையும் அதன் பின்னுள்ள அதிகாரங்களையும் வாசிக்கும் பொழுது இப்புஸ்தகத்தின் சுருக்கம் (summary) வெளியாக்கப்பட்டது என்பதை அறியலாம். இந்த 20ம் அதிகாரத்தில் 2ம் வசனத்தில் **''பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலு சர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டி வைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதை பாதாளத்திலே தள்ளியடைத்து, அதன்மேல் முத்திரை போட்டான்.''** என்று வாசிக்கிறோம். இங்கே நாம் ஒரு வினாவை எழுப்புவோம். சாத்தான் கட்டப்பட்டானா? என்பது தான்.

விடையாக 2 பேதுரு 2:4ம் வசனத்தில் **அந்தகாரச் சங்கிலியினால் கட்டப்பட்டிருக்கிறான்** என்றும் யூதாவின் புஸ்தகத்தில் 6ம் வசனத்தில் **நித்திய சங்கிலியினால் கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்** என்றும் குறிப்பிட்டதனால் சாத்தானின் வல்லமை அபகரிக்கப்பட்டதை நாம் அறிகிறோம். கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்ததினால் மரணத்திற்குரிய அவனுடைய வல்லமை பிடுங்கப்பட்டது. மரித்தோர் யாவரும் எழுந்திருப்பார்களென்பது உண்மையே (யோவான் 5:28, 29). மேலும் எபிரேயர் 3:14,15ல் மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும் படிக்கு அப்படியானார் என்று அவதாரத்தை குறித்து தெளிவாய் காணப்படுகிறது. எனவே இவைகள் முடிந்த காரியமேயொழிய இனிமேல் நடக்கும் காரியமல்ல. அப்படி இவைகள் இனிமேல் நடக்கும் காரியமானால் கிறிஸ்து உயிர்தெழுந்ததினால் நமக்கு பிரயோஜனம் என்ன? இன்னும் ஆராய்வோம்.

மேலும் 20:3ம் வசனத்தில் **''அதற்கு பின்பு அது கொஞ்ச காலம் விடுதலையாக வேண்டும்''** என்று சொல்லும் பொழுது சாத்தான் மேலே சொன்னபடி கட்டப்பட்டிருக்கிறான் என்பது உண்மையே. மீண்டும் ''விடுதலையாக வேண்டும்'' என்கிற பொழுது அது இனிமேல் நடக்கப்போகிற ஓர் காரியமாகும். இதைக்குறித்து 2 தெசலோனிக்கேயர் 2:3ல் **''கேட்டின்**

**மகனுகிய பாவ மனிதன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது''** என்று வாசிக்கும் பொழுது, இது நமது நம்பிக்கையை பெலப்படுத்துகிறதல்லவா!

இன்னும் 20:4,5ம் வசனங்களில் முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்து எழுதுகிறதை நாம் கவனிப்போம். முதலாம் உயிர்த்தெழுதல் என்றால் என்ன? அவர்கள் கிறிஸ்துவோடு எழும்பி ஆயிர வருஷம் அரசாளுவார்கள் என்று சொல்லியிருக்கிறதே. பாவத்திற்கென்று கிறிஸ்துவுடனே கூட மரித்தவர்கள் ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டவர்களே. இதைக்குறித்து ரோமர் 6:4,5ல் ''மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களாலீனால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.'' என்று கூறும் பொழுது கிறிஸ்தவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்றிருக்கிறார்களென்றும் அவர்கள் கிறிஸ்துவுடனே கூட அரசாட்சி செய்கிறார்கள் என்பது தெளிவு. இன்னும் எபேசியர் 2:7ல் ''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடு கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடு கூட உட்காரவும் செய்தார்'' என்றும் 2 தீமோத்தேயு 2:11, 12ல் ''**இந்த வார்த்தை உண்மையுள்ளது. என்னவெனில் நாம் அவரோடு கூட மரித்தோமானால், அவரோடு கூட பிழைத்திருப்போம்.** அவ-**ரோடுகூட பாடுகளை அனுபவித்தோமானால் அவரோடு கூட ஆளுகை செய்வோம்.** என்றும் ஊர்ஜிதம் பண்ணியிருக்கிறது. இதன் மூலமாக நாம் அறிந்து கொள்வதென்ன? சுவிசேஷத்தினிமித்தமாக நாம் பாடுகளை அனுபவிக்கும் போது நாம் அரசாட்சி செய்வதும் உண்மையே. இப்படியாக வெளிப்படுத்தின விசேஷத்தில் முடிந்த காரியங்களையும் தற்சமயம் நடக்கும் காரியங்களை 1 முதல் 6ம் வசனம் வரை கவனித்தோம். 7ம் வசனம் முதல் ''சாத்தான் காவலிலிருந்து விடுதலையாகி பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம் போக்கும் படிக்கும் அவர்களை யுத்தத்திற்கு கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான். அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்து போட்டது. ''என்றும் குறிக்கும் பொழுது இனிமேல் சம்பவிக்கும் காரியம் நமக்கு வெளியாயிருக்கிறது. இப்படியிருக்க கிறிஸ்துவை விசுவாசிக்

கிற நாம் அவருடைய வல்லமையை மறுதலிப்போமானால் எப்படி அவருடைய ராஜ்யத்தை அடைவோம். நன்கு ஆராய்வோமாக.

இன்னும் ஒரு காரியத்தை வெளிப்படுத்துகிறேன். ஆயிர வருடம் என்பது குறிப்பாக ஆயிர வருடம் என்று கணக்கிடுகிறார்கள். நாம் அறியவேண்டியது என்னவெனில் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்ட வார்த்தைகள் ஓர் உருவகக் குறிப்பாக காணப்படுகிறது. இந்த 20ம் அதிகாரத்தில் சங்கிலி, ஆயிர வருடம் என்பவைகள் உண்மையான பொருள்படாமல் ஓர் உதாரணத்தையே குறிக்கும். முதலாம் அதிகாரத்தில் 2ம் வசனத்தில் 7 நட்சத்திரங்களை 7 சபைகளின் தூதர்களும் 7 குத்துவிளக்குகள் 7 சபைகளும் என்று வாசிக்கிறோம்.

இவ்விதமான குறிப்பு காணப்படுவதனால் ஆயிர வருடம் என்பதைப்பற்றி 2 பேதுரு 3:8ம் வசனத்தில் காண்கிறபடி 1 நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் 1 நாள் போலவும் கர்த்தருக்கு காணப்படுகிறதனால் ஆயிர வருடம் சரியாக ஆயிர வருடம் என்று எண்ணப்படாமல் ஒரு கால அளவையே குறிக்கும். மேலும் அவர் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது.

எனவே பிரியமானவர்களே, வெளிப்படுத்தின விசேஷத்தின் சுருக்கத்தை நன்கு ஆராய்ந்து படிப்போமாக.

## 2. அரசாட்சியைக் குறித்த தீர்க்கதரிசனங்களும் அதன் நிறைவும் :-

தீர்க்கத் தரிசனங்களை கவனிக்குமுன் கடவுளின் பொதுவான அரசாட்சியை அறிந்து கொள்வது மிகவும் பிரயோஜனமாயிருக்கும்:-

சங்கீதம் 97:1 முதல் 7ம் வசனம் வரை நாம் வாசிக்கும் பொழுது 2 விசேஷித்த காரியங்களை கவனிக்கலாம். ஒன்று "கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்" என்றும் இரண்டாவது "நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்" என்பதே. இதிலிருந்து கர்த்தர் உலகம் முழுமைக்கும் ராஜனாய் பரலோகத்திலிருந்து அரசாளுகிறார் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய காரியம். உலகத்தை சிருஷ்டித்த அவர் ஆளாமலிருப்பாரோ. அவருடைய சிங்காசனம் பரலோகத்திலும் அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது என்றும் அவருடைய இமைகள் அவர்களை சோதித்தறிகிறது என்றும் 11ம் சங்கீதம் 4ம் வசனத்தில் வெளியாக்கப்பட்டன.

மேலும் அவர் பூமியை அதிகாரத்தினால் ஆளுகிறார் என்று ரோமர் 13:1ம் வசனத்தில் "எந்த மனுஷனும் மேலான அதிகார

முள்ளவர்களுக்கு கீழ்படியக் கடவன். ஏனென்றால் தேவனாலே யன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரம் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது'' என்று வெளிப்படுத்தியிருக்கிறது. எனவே பூமிக்குரிய ராஜ்யத்திற்கு ராஜாக்களைக் கொண்டும் ஆவிக்குரிய ராஜ்யத்திற்கு தாமாகவும் அரசாட்சி செய்கிறார். யோவான் 18:36ல் இயேசு ''என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்காதபடி என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல'' என்றார். எவ்வண்ணமாக பரலோகத்தில் பரிசுத்தமும் நீதியும் நிலவிவருவதுபோல் இப்பூலோகத்தில் அப்பேற்பட்ட ஆவிக்குரிய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கச் சித்தமானார். சீசர்களுக்கு ஜெபிக்க கற்பித்துக் கொடுக்கும் போது மத்தேயு 6.10ல் ''உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக'' என்று போதித்தார்.

நிற்க மனுஷன் விரும்புவது என்ன? தேவன் பூமிக்கு வந்து ராஜ்யபாரம் பண்ணவேண்டுமென்று தாம் தெரிந்தெடுத்த இஸ்ரவேல் மக்களும், சீஷர்களும் விரும்பினார்கள். அதுபோலவே இக்காலத்தில் விசுவாசிகளில் ஒரு கூட்டத்தார் எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். தெய்வீக ஆளுகையை அவர்கள் புரிந்து கொள்ளாததே இதற்கு காரணம்.

உதாரணமாக தேவன் ஆபிரகாமை விக்ரவணக்கத்தின் மத்தியிலிருந்து தெரிந்தெடுத்து ஒரு பெரிய இஸ்ரவேல் குடும்பமாக்கி மோசேயைக் கொண்டும் நியாயாதிபதிகளைக் கொண்டும் அரசாட்சி செய்ய இஸ்ரவேல் மக்கள் சாமுவேலை நோக்கி ''எங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தும்'' என்று கேட்டார்கள். அதற்கு தேவன் சாமுவேல் தீர்க்கதரிசியை நோக்கி ''அவர்கள் உன்னை தள்ளவில்லை ஆனால் நான் ராஜ்யபாரம் பண்ணுவதை விரும்பவில்லை என்றுர் (1 சாமுவேல் 8:5-7) ஆகையினால் அவர்கள் விரும்பினதை செய் என்றார். இவ்விதமாக தாம் தெரிந்தெடுத்த இஸ்ரவேல் மக்கள் கர்த்தர் செய்யும் ஆளுகையை அறிந்து கொள்ள முடியாமல் தங்கள் இஸ்டத்தின்படி நிறைவேற விரும்பினார்கள். கடவுளின் சித்தம் தடைபட்டது. எனினும் அவர்கள் விருப்பப்படி ராஜாக்களை ஏற்படுத்தி அவர்கள் மூலமாய் வரும் துன்பங்களை அனுபவிக்கவும் பின் தாம் சித்தத்தின்படியே மீண்டும் ஆளுகையை எடுத்துக் கொண்டார். இந்த அரசாட்சி இப்பொழுதும் நடந்து கொண்டு வருகிறதை கவனிப்போமாக.

கர்த்தர் சொன்ன பிரகாரம் சாமுவேல் தீர்க்கதரிசி முதலாவது சவுலையும் அதற்குபின் தாவீதையும் ஏற்படுத்தினான். இவ்விதமாக

ராஜாக்களை ஏற்படுத்தினாலும் அந்த ராஜ்யம் கர்த்தரின் ராஜ்யமென்றும், கர்த்தருடைய சிங்காசனம் என்று கருதப்படவும் அந்த ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைநிற்கும் என்று உரைக்கப்பட்டது.

தாவீது ராஜ்யபாரம் பண்ணும்போது 2 சாமுவேல் 7:13 படி **"உன்னுடைய ராஜ்யத்தை என்றென்றைக்கும் நிலைநிறுத்துவேன்"** என்றார். மேலும் 1 நாளாகமம் 28:4,5ல் தாவீது **"இஸ்ரவேலை என்றென்றைக்கும் அரசாள தன்னை தெரிந்து கொண்டாரென்றும் தன்னுடைய பிள்ளைகள் எல்லாரிலும் சாலோமோனை தெரிந்தெடுத்து இஸ்ரவேலை ஆள கர்த்தரின் ராஜ்யத்தின் சிங்காசனத்தை அவனுக்கு கொடுப்பேன்** என்று சொன்னார்." என்றான். அப்படியே 1 நாளாகமத்தில் 29:23ல் **"சாலோமோன் தன் தகப்பனாகிய தாவீதுக்கு பதிலாக கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்தான்"** என்றும் வெளியாக்கப்பட்டது. எனினும் இது எப்படி கர்த்தருடைய ராஜ்யத்தின் சிங்காசனம் என்று அழைக்கப்படுகிறது என்பதை நன்கு அறிவோமாக.

சாலோமோன் அரசாண்டபிறகு 20 இராஜாக்கள் யூதாவை சுமார் 349 வருஷம் அரசாண்டார்கள். கடைசியாக கோனியாவின் காலத்தில் எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் 22:30ம் வசனத்தில் கர்த்தர் உரைத்ததாவது :- **இந்த புருஷனை சந்தானமற்றவன் தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைக் குறித்து எழுதுங்கள் அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப்போகிறதில்லை** என்றார்." மேலும் எரேமியா 23.5ல் **"இதோ நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன். அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம் பண்ணி பூமியில் நீதியையும் நியாயத்தையும் நடப்பிப்பான்"** என்று தீர்க்கதரிசனமாக உரைத்தான்.

அவ்வண்ணமாகவே கோனியாவின் காலத்திற்கு பிறகு சுமார் 586 வருஷத்திற்கு பிறகு கிறிஸ்து இயேசு பிறந்தார். அவரைக் குறித்து லூக்கா 1:31-33ல் தேவதூதன் மரியாளை நோக்கி **"இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்திற்கு முடிவிராது.**

என்றான்'' அப்படியே யூதாவின் கடைசி ராஜாவாகிய கோனியாவிற்கு பிறகு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தை ஏற்றுக் கொள்வார் என்றும் அந்த தாவீதின் சிங்காசனம் கர்த்தருடைய சிங்காசனம் என்று 1 நாளாகமம் 29:23ல் கூறினபடி ஆயிற்று. இப்பூலோகத்தில் அது தாவீதின் சிங்காசனம் என்றும் பரலோகத்திலிருந்து இயேசு அரசாட்சி செய்வதினால் அது கர்த்தருடைய சிங்காசனம் என்றும் அழைக்கப்படுகிறது. இயேசு மரித்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். எபிரேயர் 1:3ல் **''இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்''** என்றும் மாற்கு 16:19ல் **''இவ்விதமாக கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்''** என்றும் உறுதியாக்கப்பட்டது. இவ்வாறு இருக்க நாம் அவர் அரசாளவில்லை என்று கூறுவது எப்படி? பூலோகத்தில் ராஜாக்கள் இருக்க அவர் இப்புவிக்கு வந்து அரசாளுவாரா. மேலும் அவர் பரிசுத்தமும் நீதியும் நிறைந்த ராஜ்யத்தை ஸ்தாபிக்க சித்தமானதால் இவ்வாறு நடந்தேறுகிறது. அவர் பரலோகத்திற்கு ஏறின பொழுது தொடங்கின இந்த அரசாட்சி அவர் மீண்டும் வரும் வரைக்கும் நடந்தேற வேண்டும் என்றும் அன்றே தாம் ஸ்தாபித்த அந்த ராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார் என்றும் 1 கொரிந்தியர் 15:25ல் நாம் காணலாம். அவர் மீண்டும் இவ்வுலகத்தில் ஆகாயத்திலே காணப்படுவது (இரண்டாம் வருகை) நியாயத் தீர்ப்புக்கென்றே. யோவான் 5:27,28,29ல் **''அவர் மனுஷ குமாரனுயிருக்கிறபடியால், நியாயத் தீர்ப்பு செய்யும் படிக்கு அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறுர். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரிய பட வேண்டாம். ஏனென்ருல் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்** என்பதே. மத்தேயு 25:31-46, வெளிப்படுத்திய விசேஷம் 20:11-15ம் வசனம் வரை வாசியுங்கள். இயேசு கிறிஸ்து பூலோகத்தில் வந்து அரசாட்சி செய்கிறவரல்ல. பரலோகத்திலிருந்து கொண்டு அரசாட்சி செய்கிறார். இன்னும் 3ம் பகுதியில் அவர் ஸ்தாபித்த ராஜ்யம் அல்லது சபையை பற்றியும் அரசாட்சியை பற்றியும் நாம் அறிவோமாக.

**3. இராஜஜிய ஸ்தாபனமும் அரசாட்சியும்:-**

**குறிப்பு:**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்த நோக்கங்களில் இராஜ்ஜிய ஸ்தாபகம் ஒன்றாகும். அந்த ராஜ்ஜியம் ஆவிக்குரியதென்றும் அது எரேமியா தீர்க்கதரிசி 23:5ல் கூறினபடி நீதியையும் நியாயத்தையும் நடப்பிக்கும் ராஜ்யமாகும். அந்த இராஜ்ஜியத்தை கிறிஸ்து "சபை" என்று அழைத்தார். மத்தேயு 16:18 **"இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தில் வாசல்கள் அதை** மேற்கொள்வதில்லை" என்றார். எனவே இராஜ்ஜியமும் சபையும் ஒன்றே. **இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்** என்றும் (அப்போஸ்தலர் 2:47) **இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்** என்றும் கொலோசேயர் 1:13ல் கூறியிருக்கிறார். ஆகவே அதன் காலம், இடம், அழைப்பு, வாக்குத் தத்தங்கள் முதலியவற்றை ஆராய்வோம்.

முதலாவதாக காலத்தை குறித்து ஆராய்வோம். தானியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகம் 2:44ல் **"அந்த ராஜாக்களின் நாட்களில் பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்"** என்று உரைக்கப்பட்டது. பாபிலோன் அரசாட்சிக்கு பிறகு, பெர்சியா, கிரேக்க, ரோம ராஜ்யங்கள் கிளம்பின கடைசியாக ரோம ராஜ்ஜிய காலத்தில் இயேசு கிறிஸ்து எழும்பி என்றும் அழியாத ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

மேலும் ஏசாயா தீர்க்கதரிசி 2:2 — 3ம் வசனங்களில் அது கடைசி நாட்களில் தோன்றும் என்றும் கடைசி நாட்கள் என்பது கிறிஸ்துவின் காலமென்றும் அப்படியே அப்போஸ்தலர் 2:17ல் கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்றபடி கிறிஸ்துவானவர் உயிர்தெழுந்து பரலோகத்திற்கு போன பிறகு பெந்தேகொஸ்தே நாளில் ஆவி ஊற்றப்பட்டு ஆவியின் ராஜ்ஜியம் ஸ்தாபகமானது இடத்தைகுறித்து எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனம் வெளிப்படும் என்று உரைத்தப்டி பேதுரு முதல் முதலாக **"மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் எப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்றான்** (அப்போஸ்தலர் 2:38) இவ்விதமாக காலம், கடைசி நாட்கள் என்றும் வாக்குத் தத்தம் பரிசுத்த ஆவியின் வரம் என்றும் காணப்பட்டது.

இன்னும் ராஜ்யத்தை ஸ்தாபிக்க இயேசு மத்தேயு 3:17ல் **''மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது** என்றும் மாற்கு 9:1ல் **''இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்ஜியம் பலத்தோடு வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை''** என்றும் கூறினார். அது போலவே அப்போஸ்தலர்கள் காலத்திலே ராஜ்ஜியம் தோன்றின. கிறிஸ்துஉயிர்த்தெழுந்து அப்போஸ்தலர்க்கு தரிசனமாகி தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை பேசினார். தெளிவாக திருஷ்டாந்தங்களினாலே. அவர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். மேலும் அவர் கூறினதாவது **''நீங்கள் எருசலேமை விட்டு போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட வாக்கு தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்** என்றார். அப்படியே பெந்தே கோஸ்தே நாளில் உருவானது. அது சபை, தேவசபை, குமாரனின் ராஜ்யம் என்று அழைக்கப்படுகிறது. இது தேவ ஞானத்தில் அடங்கியுள்ளது. (எபேசியர் 3:9) இதை மறுதலிக்கிறவர்கள் யார்? இப்படியாக ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் அதை ஆளாமலிருப்பதெப்படி? எனவே இயேசு ராஜ்யத்தை ஸ்தாபித்து அரசாட்சி செய்கிறார். இன்னும் 1 கொரிந்தியர் 15:24, 25ம் வசனங்களில் **''எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. அதன் பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் பரிகரித்து தேவனும் பிதாவுமாயிருக்கிறவர்க்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்''** என்றும் காணப்படுகிறது. எனவே நாம் அவருடைய அரசாட்சியில் இருக்கிறோம். அரசாட்சியில்லாவிட்டால் விடுதலையின் சட்டம் எதற்கு, சுவிசேஷத்தின் படி நியாயந் தீர்ப்பார் என்றும் ரோமர் 2:16ல் வாசிக்கிறோம்.

இப்படியிருக்க நாம் அவர் செய்யும் அரசாட்சியை மறுதலிப்போமானால் நிச்சயமாகவே நாம் கள்ள போதகத்திற்கு செவி கொடுக்கிறவர்கள் என்பது உறுதி. நம்மிடத்தில் காணப்படுவது வஞ்சக ஆவியே தவிர வேறொன்றுமில்லை.

இன்னும் சிலர் 1 தெசலோனிக்கேயர் 4:14ல் காண்கிறபடி கிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி தமது பிள்ளைகளை ஆகாயத்தில் சேர்த்து கொண்டு ஏழு வருஷம் அரசாட்சி செய்வார் என்றும் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரம் என்ன? 1 தெசலோனிக்கேயர் 4ம் அதிகாரத்தின் கடைசி பாகத்தை வாசிக்கிறவர்கள் 5ம் அதிகாரத்தின் 1ம் வசனத்தை வாசிப்பார்களானால் **''சகோதரர்களே இவைகள் நடக்கும் காலங்கள்''** என்று தம்முடைய இரண்டாம் வருகையை குறித்து கூறி அது திருடன் வருகிற விதமாய் வரும் என்றும் வெளியாக்கப்பட்டதினால் எல்லாம் ஒரே

நாளில் காணப்படும், என்பதற்கு சந்தேகமில்லை. அரசாட்சியை மறுதலிக்கிறவன் கர்த்தருடைய வசனத்தை விசுவாசியாததினால் அவனை விட்டு நாம் விலக வேண்டும். 2 தீமோத்தேயு 3:5ல் தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். நீ அவர்களை விட்டு விலகு'' என்று கூறுகிறான். ஆகவே நாம் மிகுந்த ஜாக்கிரதையோடு வேதத்தை வாசித்து புரிந்து கொள்வோமாக.

பிரியமானவர்களே, கடைசியாக இன்னும் ஓர் காரியத்தை காண்பித்து மக்களின் தவறான சிந்தையை எடுத்துக் காட்டுகிறேன்.

அதாவது கிறிஸ்து அரசாட்சி செய்யும் காலத்தில் ''ஓநாய் ஆட்டு குட்டியோடு தங்கும், புலி வெள்ளாட்டு குட்டியோடு படுத்துக் கொள்ளும், கன்று குட்டியும் பால சிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான் என்பதே'' மக்களின் உறுதியான நம்பிக்கை. அவ்விதமான அரசாட்சியில்லாததினால் அவர் அரசாட்சி இனிமேல் தான் வரும் என்று நம்புகிறோம் என்கிறார்கள். வேதத்தை நாம் சரியான முறையில் பகுத்தறியாவிட்டால் நம்முடைய நம்பிக்கை வெறுமையாகவும் புகையைப் போல் மறைந்தும் போகும் என்பதற்கு சந்தேகமில்லை.

மேற்கண்ட இந்த காரியத்தை நாம் நன்றாய் புரிந்து கொள்ள வேண்டுமானால் ஏசாயா 11:1 — 8ம், ஏசாயா 65:17 — 25ம் 2 பேதுரு 3:12 — 14ம் கடைசியாக வெளிப்படுத்தின விசேஷம் 20:15ம் வசனமும் 21:1 — 5 வசனங்களையும் வாசித்தால் நமக்கு அதன் நோக்கத்தை வெளிப்படுத்தும்.

ஏசாயா 11ம் அதிகாரத்தில் முதல் 2 வசனங்களில் கிறிஸ்து வானவர் கிளையாக தோன்றுவார் என்பதையும், 3 — 5ல் அவருடைய கடைசி நாட்களில் நடக்கும் நியாயத் தீர்ப்பை குறித்தும் 6 — 8ம் வரை சமாதானம் சந்தோஷம் என்னும் அமைதியின் காலத்தை உவமையாகவும் விளங்கியிருப்பதை அறியலாம்.

மேலும் இவைகள் எப்போது சம்பவிக்கும் என்பதை ஏசாயா 65:17ல் ''இதோ நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதில்லை என்று 2ம் வருகைக்கு பின்னாக நடக்கப்போகிற சமாதானத்தைக் குறித்தும், 2 பேதுரு 3ம் அதிகாரம் 12 — 14ம் வசனங்களில் அக்காலத்தை குறித்தும் அது சமாதானத்தின் காலம் என்று வெளிப்படுத்தியிருக்கிறது.

இன்னும் தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்திய விசேஷத்தில் 20:14,15ல் நியாயத் தீர்ப்பை குறித்து ''அப்பொழுது மரணம்

**பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாக காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்''** என்றும் 21ம் அதிகாரத்தில் முதல் வசனத்தில் பின்பு என்று தொடங்கி நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன் என்று வரப் போகிற சமாதானத்தில் காலத்தை காண்பித்து 4ம் வசனத்தில் **''அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்''** இனி மரணமில்லை, துக்கமில்லை, தவறுதலுமில்லை, வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்து போயின என்று குறிக்கும் போது அது சமாதானத்தில் காலத்தை விளக்கியுள்ளது.

இப்படியிருக்க நாம் அறிய வேண்டிய குறிப்புகள் என்னவெனில் முதல் கூறிய சம்பவம்.

1. 'நியாயத்தீர்ப்பு காலத்திற்கு பின்னும்

2. அது சமதானத்தின் காலத்தை குறிக்கும் உவமைகளே என்று அறிந்து கொள்வோமாக. மேலும் நாம் நியாயந் தீர்க்கப்படும் போது எப்பேர்ப்பட்ட சரீரத்தை உடையவர்களாயிருப்போம். மகிமையின் சரீரமாகிய ஆவியின் சரீரத்தை அளித்திருக்கும் பொழுது இப்பேற்பட்ட மிருகங்கள் நமக்கு தேவைதானா? சற்று சிந்தித்துப் பாருங்கள். தப்பிதமான அர்த்தங்கொண்டு நம்மை நாமே கெடுத்து கொள்கிறதுமல்லாமல் மற்றவர்களுக்கு அவர்கள் விசுவாசத்தை கலைத்தால் நாம் அதிக ஆக்கினையை அடைவோமல்லவா?

கடைசியாக நாம் அறிய வேண்டியது அவருடைய இரண்டாம் வருகை ஒரே வகையாக காணப்படுமே ஒழிய மூன்று தனித் தனிப் பாகமாக வருகை உண்டென்று சொல்வது சத்தியத்திற்கு முரண்பாடாகும். இப்பொழுது நாம் அவருடைய வருகைக்கு எதிர் பார்க்கிறோம். இதைக் குறித்து மத்தேயு 25:31 வசன முதல் முடிய நாம் வாசிப்போமானால் அவருடைய வருகை நியாயத் தீர்ப்புக்கென்றும் 1கொரி 15:24ம் வசனத்தில் தம்முடைய மகிமையுள் சபையை / ராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார் என்றும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் அவர் 3½ வருஷம் ஊழியம் செய்து தமது வல்லமையை காண்பித்தது மூலமாக அவரை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறோம். மேலும் நாம் அவருடைய சித்தத்திற்கு எதிர்த்து போராடாமல் எழுதியபடி விசுவாசித்து ஜீவிப்போமாக.



முன் அட்டை பின் பக்கம் பார்க்கவும்

# வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருமறை ஆசான் வாசகர்களின் முகவரிகளை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவரை தங்கள் முகவரிகளை எழுதி அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். நம்முடைய விலாசம் தான் அவர்களுக்குத் தெரியுமே என்று மெத்தனமாக இராதீர்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். நன்றி.

1. பெயர்
2. முழு முகவரி
3. பின்கோடு
4. மாவட்டம்

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press.
Erode-638 003.
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE - 638 001.